**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

**தவணைப் பரீட்சை, நவம்பர்- 2016**

**Term Examination, November - 2016**

FWC

| தரம் :- 13 (2017) | இலங்கை வரலாறு | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

பகுதி - I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

❖ **01 - 05 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களுள் ஒன்று ஏதோ காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தினைப் புள்ளிக்கோட்டில் இடுக.**

01) (1) காவிய சேகர (2) லோவடசங்கராவ (3) கந்தவுறு சிரித்த
(4) புதுகுணலங்காரய (5) குத்திலகாவிய ( .......)

02) (1) சூகரதீத்த (2) ஜம்புகோளப்பட்டினம் (3) கோகர்ண
(4) கச்சதீத்த (5) உருவெல ( .......)

03) (1) எலகரக் கால்வாய் (2) பப்பதந்தக் கால்வாய் (3) மினிப்பே கால்வாய்
(4) ரிதிபெந்திக் கால்வாய் (5) ஜெயகங்கை கால்வாய் ( .......)

04) (1) இந்தியா (2) பாரசீகம் (3) கம்பூச்சியா
(4) அரேபியா (5) சீனா ( .......)

05) (1) புத்ததாஸ (2) நான்காம் காசியப்பன் (3) கனிட்டதிஸ்ஸ
(4) 5ம் மகிந்தன் (5) 1ம் உபதிஸ்ஸ ( .......)

❖ **06 - 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத அச்சோடியை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

06) (1) உருவெல - கலா ஓயா
(2) மகாகம - கிரிந்தி ஓயா
(3) தீகவாவி - கம்பீர நதி
(4) கல்யாணி - கல்யாணி நதி
(5) தம்பபன்னி - கதம்ப நதி ( .......)

07) (1) 2ம் சிவதேவாலயம் - சோழர் மரபு
(2) கல்விகாரை சிலைகள் - அமராவதி மரபு
(3) குதிரையும் மனிதனும் - பல்லவர் மரபு
(4) சிகிரியா ஓவியம் - குப்தர் மரபு
(5) இசுறுமுனியா காதலர் - மௌரியர் மரபு ( .......)

08) (1) 1ம் விஜயபாகு - தேவனகல கல்வெட்டு
(2) ஸ்ரீமேகவண்ணன் - தோணிக்கல கல்வெட்டு
(3) நிசங்கமல்லன் - கல்பொத்த கல்வெட்டு
(4) 1ம் பராக்கிரமபாகு - சங்கமுவிகாரைக் கல்வெட்டு
(5) 4ம் உதயன் - ஹோபிற்றிகம கல்வெட்டு ( .......)

09) (1) திக்சந்த பிரிவெனா - அநுராதபுரம்
(2) ஆலாஹன பிரிவெனா - பொலநறுவை
(3) விஜயபாகு பிரிவெனா - தொட்டகமுவ
(4) சுனேத்திராதேவி பிரிவெனா - பெப்பிலியான
(5) பத்மாவதி பிரவெனா - தம்பதேனியா (.......)

10) (1) 1ம் விஜயபாகு - விஜயராசபுர
(2) எல்லாளன் - விஜிதபுர
(3) 6ம் பராக்கிரமபாகு - மகாநுவரபுர
(4) 4ம் பராக்கிரமபாகு - செங்கடகலபுர
(5) 1ம் பராக்கிரமபாகு - பண்டுவஸ்நுவர (.......)

❖ **11 - 15 வரை $X, Y$ நிரல்களில் தரப்பட்டுள்ளவற்றை தொடர்புபடுத்தும்போது வரும் சரியான சேர்மானத்தின் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

11) (1) படகாரிக A - வாயிற்காவலன்
(2) பண்டகரிக்க B - ஆவணக்காப்பாளர்
(3) அசிக்காகிக C - நிதி அதிகாரி
(4) மஹல D - வாள்படைத் தலைவன்
(5) தோவரிக்க E - களஞ்சிய அதிகாரி
(1) CEDBA (2) CDABE (3) CEADB (4) CBADE (5) CEBDA (.......)

12) (1) கரிந்தி நதி A - கல்லோயா
(2) கோண நதி B - வளவகங்கை
(3) மகாவாலுகா நதி C - கிரிந்தி ஓயா
(4) வனவாகினி நதி D - கலா ஓயா
(5) கால்க நதி E - மகாவலி கங்கை
(1) CEADB (2) CDEBA (3) CABED (4) CDABE (5) CEABD (.......)

13) (1) தம்பதேனியா A - கங்காஸ்ரீபுரம்
(2) யாப்பகுவா B - அத்துகல்புரம்
(3) குருநாகல் C - ஜம்புதோணிபுரம்
(4) கம்பளை D - 2ம் சீகிரியா
(5) கோட்டை E - ஸ்ரீஜெயவர்த்தனபுர
(1) CEADB (2) CBADE (3) CDBAE (4) CBADE (5) CEADB (.......)

14) (1) விதான சித்திரம் A - ஈசுறுமுனியா
(2) செதுக்கல் சிற்பம் B - சிகிரியா
(3) குன்றுச் சித்திரம் C - தம்புள்ள
(4) கருங்கற் சிற்பம் D - கண்டகசேத்தியம்
(5) புடைப்புச் சிற்பம் E - கல்விகாரை
(1) CABED (2) CDEBA (3) CBADE (4) CEBAD (5) CDABE (.......)

15) (1) அமராவதி கலைமரபு A - 2ம் சிவதேவாலயம்
(2) பல்லவர் மரபு B - நாலந்தா தூபி
(3) சோழர் மரபு C - கந்தக சைத்தியம்
(4) மௌரியர் மரபு D - இசுறுமுனியா காதலர் சிலை
(5) குப்தர் மரபு E - ரூவான்வெலிசாய
(1) CBAED (2) CABED (3) CBEAD (4) CDABE (5) CEABD (.......)

❖ **16 - 20 வரையுள்ள ஒவ்வொரு வினாவினதும் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16) பின்வருவனவற்றுள் எந்த தொகுதியில் அனுராதபுரத்து குளங்கள் சரியான காலக்கிரம வரிசையில் உள்ளன?

(1) பசவகுளம், மகாகணதரவாவி, நொச்சிப்பொத்தான குளம், கலாவாவி, கந்தளாய்க்குளம்
(2) பசவகுளம், நொச்சிப்பொத்தான குளம், கலாவாவி, மகாகணதரவாவி, கந்தளாய்க்குளம்
(3) பசவகுளம், நொச்சிப்பொத்தான குளம், மகாகணதரவாவி, கலாவாவி, கந்தளாய்க்குளம்
(4) பசவகுளம், கலாவாவி, கந்தளாய்க்குளம், மகாகணதரவாவி, நொச்சிப்பொத்தான குளம்
(5) பசவகுளம், கந்தளாய்க்குளம், கலாவாவி, மகாகணதரவாவி, நொச்சிப்பொத்தான குளம் (.......)

17) பின்வருவனவற்றில் மகாகமவை தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த அரசர்களின் பெயர்களை காலக்கிரம வரிசையில் கூறுவது

(1) மகாநாம, யட்டாலதீச, காகவண்ணதீசன், கோட்டாபய, துட்டகாமினி
(2) மகாநாம, காகவண்ணதீசன், யட்டாலதீச, கோட்டாபய, துட்டகாமினி
(3) மகாநாம, கோட்டாபய, காகவண்ணதீசன், யட்டாலதீச, துட்டகாமினி
(4) மகாநாம, துட்டகாமினி, யட்டாலதீச, கோட்டாபய, காகவண்ணதீசன்
(5) மகாநாம, யட்டாலதீச, கோட்டாபய, காகவண்ணதீசன், துட்டகாமினி (.......)

18) தென்மேற்கே தோன்றிய இராசதானிகளை தலைநகராக தெரிவு செய்த ஆட்சியாளர்களை சரியாகக் காட்டும் விடைத்தொகுதி

(1) 3ம் விஜயபாகு, 1ம் புவனேகபாகு, 4ம் புவனேகபாகு, 2ம் புவனேகபாகு, 6ம் பராக்கிரமபாகு
(2) 3ம் விஜயபாகு, 2ம் புவனேகபாகு, 1ம் புவனேகபாகு, 4ம் புவனேகபாகு, 6ம் பராக்கிரமபாகு
(3) 3ம் விஜயபாகு, 1ம் புவனேகபாகு, 2ம் புவனேகபாகு, 4ம் புவனேகபாகு, 6ம் பராக்கிரமபாகு
(4) 3ம் விஜயபாகு, 2ம் புவனேகபாகு, 4ம் புவனேகபாகு, 1ம் புவனேகபாகு, 6ம் பராக்கிரமபாகு
(5) 3ம் விஜயபாகு, 4ம் புவனேகபாகு, 2ம் புவனேகபாகு, 1ம் புவனேகபாகு, 6ம் பராக்கிரமபாகு
(.......)

19) இலங்கை மீது மேற்கொள்ளப்பட்ட தென்னிந்தியப் படையெடுப்புக்களைக் கால ஒழுங்கில் சரியாகக் காட்டுவது

(1) சேனன் - குத்திகன், எல்லாளன், பஞ்சதிராவிடர், 3ம் கிருஷ்ணன், 1ம் ராஜராஜன்
(2) சேனன் - குத்திகன், பஞ்சதிராவிடர், 3ம் கிருஷ்ணன், எல்லாளன், 1ம் ராஜராஜன்
(3) சேனன் - குத்திகன், 3ம் கிருஷ்ணன், எல்லாளன், பஞ்சதிராவிடர், 1ம் ராஜராஜன்
(4) சேனன் - குத்திகன், 1ம் ராஜராஜன், எல்லாளன், பஞ்சதிராவிடர், 3ம் கிருஷ்ணன்
(5) சேனன் - குத்திகன், 3ம் கிருஷ்ணன், எல்லாளன், 1ம் ராஜராஜன், பஞ்சதிராவிடர் (.......)

20) தென்மேற்கே தோன்றிய இராசதானி காலத்து இலக்கியங்களை காலவரிசைப்படுத்தி ஒழுங்கு படுத்தினால் சரியாகக் காட்டுவது

(1) சிதத்சங்கராவ, காவியசேகர, தலதாசிரித, யாழ்ப்பாண வைபவமாலை
(2) சிதத்சங்கராவ, தலதாசிரித, காவியசேகர, யாழ்ப்பாண வைபவமாலை
(3) சிதத்சங்கராவ, காவியசேகர, யாழ்ப்பாண வைபவமாலை, தலதாசிரித
(4) சிதத்சங்கராவ, தலதாசிரித, யாழ்ப்பாண வைபவமாலை, காவியசேகர
(5) சிதத்சங்கராவ, யாழ்ப்பாண வைபவமாலை, காவியசேகர, தலதாசிரித (.......)

❖ **21 - 25 வரையுள்ள வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவ்விடயங்களுள் ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது. அதனை தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

21) 2ம் பராக்கிரமபாகு
(1) தம்பதேனியா கதிகாவத தொகுக்கப்பட்டது.
(2) தலதாசிரித் நூல்வடிவம் பெற்றது.
(3) கலிகால சாகித்திய சர்வக்ஞ பண்டித எனப்பட்டார்.
(4) ஜாவா நாட்டு சந்திரபானு படையெடுத்தார்.
(5) கலிங்கமாகனது ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்தார். (.......)

22) 1ம் பராக்கிரமபாகுவின் அயல்நாட்டுத் தொடர்பு
(1) பர்மா மீது படையெடுப்பு
(2) தென்னிந்தியாவில் பாண்டிய இராச்சியத்திற்கான படையெடுப்பு
(3) காம்போஜத்தோடு நல்லுறவுகள்
(4) சீனாவுடன் நல்லுறவு
(5) ‘லங்காபுர’ தலைமையில் படையெடுப்பு (.......)

23) நிசங்கமல்லன் எதிர்நோக்கிய சவால்கள்
(1) பராக்கிரமபாகுவின் சிறப்பினால் மக்கள் எதிர்த்தமை.
(2) கொவி குலத்தவர்களின் எதிர்ப்பு
(3) பாண்டியர்கள் அரச உரிமை கோரியமை
(4) சோழர் படையெடுப்பு
(5) கலிங்க வம்சத்தவன் (.......)

24) மலையக இராசதானி
(1) சேனா சம்மத விக்கிரமபாகுவால் ஆரம்பிக்கப்பட்டது.
(2) இலங்கையின் இறுதிச் சுதந்திர அரசாக திகழ்ந்தது.
(3) இராசதானியின் இறுதி அரசன் ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கனாவான்.
(4) இராசதானியினை பாதுகாத்தமை இயற்கை அரண்களாகும்.
(5) 1ம் இராஜசிங்கன் ஒல்லாந்தருடன் தொடர்பை ஏற்படுத்தினான். (.......)

25) இலங்கையில் ஒல்லாந்தர் கால நிர்வாகம்
(1) தேசவழமைச் சட்டம் அறிமுகப்படுத்தியமை.
(2) கண்டி இராச்சியத்தை தமது நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தமை.
(3) கொமாண்டரி முறையை அறிமுகப்படுத்தியமை.
(4) உயர்பதவிகளை ஒல்லாந்தருக்கு மட்டும் வழங்கியமை.
(5) பத்தேவியாவை தலைமையாகக் கொண்டு ஆட்சி செய்தமை. (.......)

❖ **26 - 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (A), (B), (C), (D) என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்து**

(A) யும் (B) யும் மட்டும் சரியாயின் .................................................................................. 1 எனவும்
(B) யும் (C) யும் மட்டும் சரியாயின் .................................................................................. 2 எனவும்
(C) யும் (D) யும் மட்டும் சரியாயின் .................................................................................. 3 எனவும்
(A) யும் (C) யும் மட்டும் சரியாயின் .................................................................................. 4 எனவும்
ஒரு விடை மட்டும் அல்லு இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் .................. 5 எனவும்
அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

26) இலங்கையில் ஆரிய குடியேற்றங்கள் தொடர்பான கூற்றில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) ஆரியர்கள் நதிக்கரையோரங்களில் குடியேற்றம் தாபித்தனர்.
(B) எல்லாக் குடியேற்றங்களும் உலர்வலயத்தில் அமைந்திருந்தமை.
(C) ஆரியர்களின் பிரதான தொழில் விவசாயமாகும்.
(D) ஆரியர்கள் தாம் அமைத்த குடியேற்றங்களை தமது பெயராலேயே அழைத்தனர். (.......)

27) 6ம் பராக்கிரமபாகு மன்னனின் சாதனைகள் பற்றிய கூற்றுக்களுள் எது / எவை சரியானது / சரியானவை?
(A) இலங்கையை ஐக்கியப்படுத்தியமை.
(B) யாழ்ப்பான அரசையும், மலையக அரசையும் அடக்க வளர்ப்பு மகன்மாரை அனுப்பியமை.
(C) கோட்டையில் ஒரு அரண் அமைத்தமை.
(D) பாண்டியர்களை அடக்கியமை. (.......)

28) இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் எது / எவை சரியானது / சரியானவை?
(A) இலங்கையுடன் அரேபிய, சீனா, உரோம் ஆகிய நாடுகள் வர்த்தகத்தில் ஈடுபட்டன.
(B) இந்தியாவுக்கு அருகில் இருப்பதால் வர்த்தகத் தொடர்பு வளர்ச்சி அடைந்தமை.
(C) வர்த்தக துறைமுகங்களாக மாந்தை, கோகர்ண விளங்கியமை.
(D) இலங்கையிலிருந்து போர்த்துக்கல்லுக்கு நேரடிவர்த்தகத் தொடர்பு பேணப்பட்டது. (.......)

29) இலங்கையின் நீர்ப்பாசன அபிவிருத்தி தொடர்பான கூற்றுக்களுள் சரியானது / சரியானவை?
(A) அநுராதபுரக் காலம் நீர்ப்பாசன விருத்தியின் உன்னத காலம்.
(B) எலகர கால்வாயை வசபன் அமைத்தான்.
(C) மின்னேரியாத் தெய்வம் என மகாசேனன் போற்றப்பட்டான்.
(D) பப்பதந்தக் கால்வாயை 1ம் அக்போ அமைத்தான். (.......)

30) கம்பளைக் கால கலை தொடர்பான கூற்றுக்களுள் எது சரியானது / சரியானவை?
(A) ‘எம்பக்கே’ இக்காலப் படைப்பாகும்.
(B) கடலாதெனியா, லங்காதிலக விகாரை கட்டப்பட்டது.
(C) 4ம் பராக்கிரமபாகு சிறந்த ஆட்சியாளன் ஆவான்.
(D) எகிப்து நாட்டுடன் வர்த்தக உறவு பேணப்பட்டது. (.......)

❖ **31 - 35 வரையுள்ள எல்லா வினாக்களிலும் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

31) பின்வருவோரில் 1ம் பராக்கிமபாகுவின் சேனாதிபதியாக இருந்தவர்களின் பெயர்த் தொகுதி
(1) ரவிதேவ - சேனாபதிதேவ
(2) லங்காபுர - தண்ட நாயக்கர்
(3) லங்காபுரதேவ - கபிஸீன
(4) லங்காபுர - மிகார
(5) ரவிதேவ - புஸ்ஸதேவ (.......)

32) இலங்கையில் ஆட்சியுரிமை தகராறு காரணமாக அயல் நாட்டு படையை வரவழைத்த முதலாவது சிங்கள மன்னன்
(1) இளநாகன் (2) குஞ்சநாகன் (3) ஶ்ரீநாகன்
(4) குஞ்ஜநாகன் (5) அபயநாகன் (.......)

33) கியூக்கடிதம் இலங்கைக்கு வந்தபோது இருந்த ஒல்லாந்த ஆளுநர் யார்?
(1) வில்லியம்பக் (2) பன்னங்கல்பெக் (3) வன்எக்
(4) பிரட்றிக்நோத் (5) ஹொன்றிவோட் (.......)

34) புத்த புத்திரதேரர், விதேகதேரர், சங்கரஸ்கிரதேரர் தர்மசேனதேரர் ஆகிய புகழ்மிக்க அறிஞர்கள் இருந்த இராசதானிக் காலம்.

(1) கோட்டை
(2) கம்பளை
(3) குருநாகல்
(4) தம்பதேனியா
(5) யாப்பகுவா ( .......)

35) புத்தகோசர் யாருடைய ஆட்சிக்காலத்தில் இலங்கை வந்தார்?

(1) மகாநாமன்
(2) புத்ததாச
(3) 1ம் உபதிஸ்ஸ
(4) கீர்த்தி ஸ்ரீ மேகவண்ணன்
(5) 1ம் அக்கிரபோதி ( .......)

❖ **36 - 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் 1, 2, 3, 4, 5 என்பவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

| முதலாம் கூற்று | | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 1 | சரியானது | பிழையானது |
| 2 | சரியானது | சரியானது |
| 3 | பிழையானது | பிழையானது |
| 4 | பிழையானது | சரியானது |
| 5 | சரியானது | சரியானதும் முதலாம் கூற்றினை நன்றாக விளக்கவதுமாகும். |

| முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|
| 36) பண்டுகாபயன் அநுராதபுரத்தை தலை நகராக்கினான். | நகரத்தை சுற்றி எல்லைகள் அமைத்து, நகரைப் பாதுகாக்க நகரகுத்திகவை நியமித்தான். (..........) |
| 37) கம்பளைக் காலத்தில் நிஸ்ஸங்க அழகக் கோனார், சேனாலங்காதிகார வம்சத்தினர் ஆட்சி செய்தனர். | எம்பக்க தேவாலயம் மரச்செதுக்கல் கலைக்கு பெயர் பெற்றது. (..........) |
| 38) கி.பி. 1505 இல் போர்த்துக்கேயர் காலித் துறைமுகத்தை வந்தடைந்தனர் | ‘விஜயபாகு கொலையின் பின்னர் கோட்டை மூன்று இராச்சியங்களாக உருவானது. (..........) |
| 39) சீதாவாக்கையின் சிறந்த மன்னன் மாயாதுன்னை | ஒல்லாந்தருடன் தொடர்பு கொண்டான். (..........) |
| 40) தேவனகல கல்வெட்டு 1ம் பராக்கிரம பாகுவின் காலத்திற்கு உரியதாகும். | பொலநறுவைக் காலத்தில் அயல் நாடுகளான பர்மா மீதும் பாண்டிய நாட்டின் மீதும் படையெடுப்பு மேற்கொள்ளப்படவில்லை. (..........) |

## பகுதி - II

❖ **முதலாம் வினாவுக்கும் வேறு ஏதாவது மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக.**

**01)** மேலே தரப்பட்ட இடங்கள் எல்லாவற்றையும் உமக்கு வழங்கப்பட்ட இலங்கைப் புறவுருவப் படத்திலே குறித்துப் பெயரிட்டு அவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சுருக்கமான வரலாற்றுக் குறிப்புகள் எழுதுக.

(i) காலி
(ii) கற்பிட்டி
(iii) வளவகங்கை
(iv) கங்காஸ்ரீபுர
(v) மகியங்கணை
(vi) கன்னொருவ
(vii) கோகர்ண
(viii) ஜம்புகோளப்பட்டினம்

(சரியாக குறித்தல் $8 \times 1 = 8$ புள்ளிகள்
சிறுகுறிப்பொன்றுக்கு $2 \times 5 = 10$ புள்ளிகள்
மொத்தம் 18 புள்ளிகள்)

**02)** அநுராதபுரத்தை தலைநகராகக் கொண்ட இராச்சியம் ஒன்றினை உருவாக்குவதில் பண்டுகாபயன் கொண்டுள்ள பங்கினை பரிசீலனை செய்க. (14 புள்ளிகள்)

**03)** மகாசேனனுடைய சமய பொருளாதாரச் சாதனைகளை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. (14 புள்ளிகள்)

**04)** பின்வரும் தலைப்புக்களின் கீழ் துட்டகாமினி வட்டகாமினி ஆகிய அரசர்களின் அரசியல் சாதனைகளின் ஒற்றுமை, வேற்றுமைகளை ஒப்பிட்டு நுணுகி ஆராய்க.
(1) அவர்கள் எதிர்நோக்கிய சவால்கள் (2) நாட்டை ஒன்றிணைத்தல் (14 புள்ளிகள்)

**05)** "ஆறாவது பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலம் கோட்டை இராசதானியின் உன்னத வளர்ச்சிக் காலமாகும். ஆராய்க. (14 புள்ளிகள்)

**06)** "மகாபராக்கிரமபாகு கடைப்பிடித்த கொள்கைகள் பொலநறுவை இராச்சியத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தன" இக்கூற்றினை ஆராய்க. (14 புள்ளிகள்)


**07)** பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டுக்கு சிறுகுறிப்பு எழுதுக.

i) கி. மு. 5 ஆம் நூற்றாண்டு வரை இலங்கைக்கு எதிரான அந்நியப் படையெடுப்புக்கள்
ii) அநுராதபுரகால கட்டிட சிற்பக்கலை
iii) போர்த்துக்கேயரின் கண்டிப் படையெடுப்புக்கள்
iv) ஆரியச் சக்கரவர்த்திகள் ($7 \times 2 = 14$ புள்ளிகள்)

**08)** "பொலநறுவைக் காலத்திற்கு பின் தோன்றிய தம்பதேனியகால மன்னர்கள் 2ம் பராக்கிரமபாகு குறிப்பிடத்தக்கவன் ஆவான்"

i) 2ம் பராக்கிரபாகுவின் தந்தையின் பெயர்? (1 புள்ளி)
ii) இவரது காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
iii) இம் மன்னனின் அரசியற் சாதனைகளைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
iv) இம்மன்னன் காலத்தில் எற்பட்ட இலக்கிய வளர்ச்சியை நுணுகி ஆராய்க. (7 புள்ளிகள்)

**09)** இலங்கையின் கரையோர மாகாணங்களில் போர்த்துக்கேயரின் கீழ் அமைந்த நிர்வாக ஒழுங்கமைப்பின் பிரதான அம்சங்களை ஆராய்க.


N
மாகாண எல்லை